www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 3 : 1 ஏப்ரல் 2001

பொருளடக்கம்

- சர்வதேச பெண்கள் தினம் - 2001
- பெண்ணைப் போற்றுங்கள்
- அறிமுக நிகழ்வு
- சமுக விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை
- பெண்கள் நலன்
- பெண்தலைமைத்துவக் குடும்பங்களில் ஆணாதிக்கம்
- மொட்டுக்கள் மலரட்டும்
- கைந்நூல் அறிமுகம்

**வன்முறைகளற்ற சமத்துவமான சமுதாயத்தை எதிர் நோக்கியே செயற்பட்டு வரும் நாம் அதற்கான எமது நடவடிக்கைகளையும் அதன் பலாபலன்களையும் இச் செய்தி மடல் மூலம் வெளியிட்டு வருகின்றோம். எமது நோக்கத்தில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை அறிய தங்கள் கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்.**

*ஆசிரியர்*

## சர்வதேச பெண்கள் தினம்



2
0
0
1



இவ்வருட சர்வதேச பெண்கள் தினம் சமாதானத்தை நோக்கியதாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் எமது நிலையம் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகளை சமாதானத்தை நோக்கிய தாக ஏற்பாடு செய்தது.

சமாதானமென்பது பெண்களுக்கு மட்டும் தேவையானதோ. பெண்கள் மட்டும் நேசிக்கும் விடயமோ அல்ல. உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் விரும்புவதும் தேவைப்பாடு உடையதும் சமாதானம் ஆகும். ஆனால் இன்று வரை அனேக நாடுகளிடையேயும், தனிமனிதரிடையேயும் சமாதானமின்மை காணப்படுகின்றது. இதன் விளைவாக கோபம், எரிச்சல், ஆத்திரம், குரோதம், போட்டி, ஆதிக்கம், வன்முறை போன்ற பக்கப் பாதிப்புக்கள் ஏற்பட உயிர் அழிவு, உடமை அழிவு, உலகழிவு என்ற அவல நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலை ஏற்படக் காரணம் யாது என ஆராய்ந்து பார்ப்போமானால், குடும்பங்களிடையே, குழுக்களிடையே, கிராம, மாவட்ட, தேசங்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும், கருத்து, வர்க்க முரண்பாடுகளும் ஆகும்.

இந்த உலகத்தில் வாழும் உயிரினங்களில் ஒன்று மனித இனம். ஆகவே பூமி என்பது மரம், செடி, கொடி, நத்தை, புறா, மலை, மனிதம் அனைத்திற்கும் சொந்தமானது.

ஆனால் பரந்து விரிந்திருக்கும் இவ் உலகத்தில் மனிதர்கள் பார்வையில்படுவது என்னவோ தங்கள் உருவங்கள் மட்டுமே. அதுவும் ஆண் உருவங்கள் மட்டுமே. பெண் உட்பட உயிருள்ள, உயிரற்ற ஏனைய அனைத்தும் தாங்கள் வாழ்வதற்கு, வசதிக்காக உள்ளவை என்ற கண்ணோட்டம் காலம் காலமாய் ஆண்களால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வடிவமைக்கப்பட்ட சமுதாய கட்டமைப்பிற்குள் விதைக்கப்பட்டு வளர்ந்துகொண்டு வருகிறது. இவ்வாறான இரு வேறுபட்ட சமுதாய அமைப்பினால் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன. ஆதிக்கம், பிடிவாதம், கோபம் போன்ற பாதகமான இயல்புகள் ஒரு சாராரிடம் உருவாக மறுபகுதியினரிடம் சாந்தம், தியாகம், விட்டுக்கொடுத்தல், அன்பு போன்ற நல்ல பண்புகள் எதிர் பார்க்கப்படுகின்றது. ஓர் குடும்ப அமைப்பை நோக்குவோமானால் அங்கு ஆண் என்ற காரணத்தால் வீட்டுத் தலைவனிடம் மேற்போந்த பாதகமான இயல்புகள் காணப்பட அவ் வீட்டுப் பெண்கள் (மனைவி உட்பட), நல்ல பண்புகளை பின்பற்ற வேண்டியவர்களாய் உள்ளனர். இங்கு ஆண் ஆதிக்கமுடையவனாகவும், தீர்மானங்கள் எடுத்துச் செயற்படுத்துபவனாகவும், அக் குடும்பத்தில் ஏனையோரின் குறிப்பாக பெண்களின் தேவைகளை நிறைவேற்றுபவனாக, அவர்கள் தேவைகளை தெரிவு செய்து செயற்படுத்துபவனாக காணப்படுகின்றான். பெண்ணின் பொருத்தமான தேவைகள் இங்கு அவளை மீறி நிராகரிக்கப்படுகிறது.

பெண் சம்பளமற்ற அடியாளாக, காட்சிப் பாவையாக வாழும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறாக பெண் அடக்குமுறை குடும்ப அமைப்பில் ஏற்படுகின்றது. அடுத்த கட்டமாக அடக்குமுறைக்கெதிராக கேள்வி கேட்கும் போராடும் நிலை தோன்ற காலம் காலமாய் ஆண்களால் கட்டமைக்கப்பட்ட குடும்ப அமைப்பில் அதிர்வலைகள் தோன்றுகின்றது. அது குடும்ப, சமூக அமைதிச் சீர் குலைவை ஏற்படுத்துகின்றது. இச் சீர் குலைவு சமூகப் பிரச்சினையாக மாறிவிடுகிறது. ஆகவே பெண் விடுதலை என்பது சமூகத் தேவையாகின்றது. ஆகவே மேற் போந்த அடிப்படைப் பிணக்குகளை குடும்பத்தில் இல்லா தொழிக்க வேண்டும். ஆகவே சமூகத்தில் தொழில் புரியும், மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும், மக்களுக்காக சேவை செய்யும் அனைத்து ஆண், பெண் அனைவரும் பெண் உரிமையை, சமத்துவத்தை விளங்கிக் கொள்ளும் அவசியம் ஏற்படுகிறது.

இதற்காக இவ்வருட மகளிர் தின கொண்டாட்டங்களை அனைத்து மகளிர் அமைப்புகளும் மக்களுடன் இணைந்து நடத்தியது. அத்துடன் அரச திணைக்களங்களும், கல்லூரிகளும் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களும் இத் தினத்தை நினைவுகூறுமுகமாக பல நிகழ்வுகளை செய்துள்ளது. இந் நிகழ்வுகளின் சில அம்சங்கள் குறைபாடுகளாகத் தோன்றுகின்றன. நிகழ்ச்சிகளின் சொற்பொழிவுகளை ஆற்றவரும் உயர் மட்ட உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகைதந்து தங்கள் உரையாற்றுகை முடிந்ததும் சென்று விடுவது நோக்கத்தை தளர்வடையச் செய்து விடுகின்றது. எம் நோக்கம் மக்களுடன், மக்களுக்காக தொழிற்படுபவர்கள் பெண் நிலைக் கருத்துக்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதாகும். எனினும் பல விமர்சனங்களுக்குள்ளும் அனைத்து அமைப்புக்களிடையேயும், மக்களிடையேயும் பெருமளவில் இன்று இத்தினம் பேசப்பட்டு வருவது பெண் விடுதலையின் ஒரு படி முன்னேற்றத்தையே காட்டுகின்றது. இந்தவகையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமானது தனது சங்கமி சங்கம், முறக்கொட்டாஞ்சேனை பெண்கள் சங்கம், இருதயபுரம், குமாரபுர பெண்கள் சங்கம், நாவற்குடா, பூநொச்சிமுனை பெண்கள் சங்கங்களுடன் இணைந்து மகளிர் தின கொண்டாட்டங்களை நடத்தியது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்ணைப் போற்றுங்கள்

புயலின் புன்னகையே!
கயவரை கண்ணால் எரிக்கும்
கண்ணகியின் தொடர்லையே
உன் எறிகணைகள் என்னாயிற்று
உன்னை உதைத்து உயிரைக்குடிக்கும்
கெட்ட எண்ணங்களை பெட்டியிலே
சுருள வைத்திடு
பெண்ணே!
உன் உருவத்தை உலகிற்கு காட்டி
உன்னுள் உறங்கும் உணர்வுகளை
உதைத்து எழுப்பி விடு!
பெண்ணின் பெறுமதி இதுதான் என
வியக்க வைத்து விடியல்களின்
உதயத்தை
உருமாறும் இதயமென மாற்றி விடு!
கருப்பையில் கணணியும்
இரப்பையிலே இரும்பாணிகளும்
இதயத்தில் இன்னல் இடியும் - கட்டிய
பெண் இவளென உன்னை உலகம்
பார்த்து பெண்ணென்றால்
பேதையென நினத்தவரும்,
பெண்ணை பொன்னாய்
மதித்து பாரினிலே உன் பெறுமதியை
அறியட்டும்

இருதயபுரம் குமாரபுரம்
பெண்கள் சங்கம்

வாழ்க்கை என்றால் அதில்
தோல்வி உண்டு
அதை வெற்றியுடன் பெண்
வென்றிடலாம்
வாழ்வதற்குப் பல வழிகளுண்டு
அவள் சோர்வதுவோ இங்கு
தேவையில்லை

கனவனே உன்னை கைவிட்டாலும்
உன் சொந்தக் காலில் நீ
வாழுகின்றாய்
சுதந்திரமான உலகிலே நீயும்
சுதந்திரப் பெண்ணாய்
வாழ்ந்திடுவாய்

பிள்ளைகளை நீயும் வாழவைத்தாய்
கல்வி கற்றிடவும் பல வழிகள்
செய்தாய்
சமுதாயம் தன்னில் முன்னேறி - நீயும்
நிம்மதியாக வாழுகின்றாய்

முறக்கொட்டான்சேனை
பெண்கள் சங்கம் ,
சக்தி, யாத்ரா பெண்கள் குழுக்கள்

## எமக்குள் ஓர் செய்தி

உண்மையிது!
அழகிய மன்னாரில்
அபலைப் பெண்கள்
போராளிகள் என
பிடித்தனர் அவர்கள்

இவர்கள் கதறிய அலைகள்
பரவாமல்
கால்களால்
வாயினை அடைத்தனர்

பல தலைமுறைகள் இடம்பெறும்
யுத்த ரணங்களில்
குதறப்படும் பெண்களின்
கதறலுக்கும் கண்ணீருக்கும்
சக்தி இருந்தால்
இன்னுமொரு பூகம்பம்
உலகில்!

குதறப்பட்டது
பெண்தான்
ஆண் இல்லையே
என - இன்னும்
மௌனம் சாதிப்போர்
எத்தனையோ

பலாத்கார
கொடூரங்களின்
வர்ணனைகளில் மயங்கி
பத்திரிகையினை புரட்டுபவர்
எத்தனையோ

இது கதையல்ல
ரசிக்க,
கொடூரத்தின் உச்சத்தில்
மின்னும் சம்பவம்
இது!
தொடரும்
கோடுகளாய்
இப்போதும் இன்னொன்றாய்
இது!

காலங்களாக
பாதுகாக்கப்பட்ட
சம்பிரதாயத்தில்
காணாமல் போன
பெண்கள் பலர்

சம்பிரதாயம் என்னும்
முதலையின் வாயில்
அகப்பட்டு தவிக்கின்றோம்

சூரியன் உதிக்க
சம்பிரதாயம் பார்ப்பதில்லையே
கணணி யுகத்திலும்
ஏன்
சம்பிரதாயம்
பார்க்கிறீர்கள்

கணவனை இழந்தால்
விதவை என
வெள்ளாடைக்குள் புகுத்தி
அபசகுணம் பார்ப்பது
சம்பிரதாயம் எனின் ,
மனைவியை இழந்தவன்
புது மாப்பிள்ளையாய்
மாறுவதுதான்
சம்பிரதாயமா?

எது
உங்கள் சம்பிரதாயம்
பிள்ளை இல்லாதவள் மலடி
பிள்ளை இல்லாதவன் யார்?

இது தான்
உங்கள் சம்பிரதாயம்
என்றால்
சம்பிரதாயம்
வெறும் சாம்பல்தானே!

சி. தலைமகள்.
நாவற்குடா
உழைக்கும் மாதர் சங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அறிமுக நிகழ்வு





எமது வெளியீட்டுப் பிரிவின் அண்மைக் கால வெளியீடுகளான "உயிர்வெளி" (பெண்களின் காதல் கவிதைத் தொகுப்பு), "பெண்களின் குரல்" (ஒலிநாடா) ஆகிய இரு வெளியீடுகளின் அறிமுக நிகழ்வு 17-03-2001 அன்று மட்/ சார்ள்ஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

சமுதாய நெறிவு சுழிவுகளுக்குள்ளும் பள்ளம் மேடுகளுக்குள்ளும் தம்வாழ்வை மேற் கொள்ளும் பெண்களில் அதிகமானோர் இன்று சுமைதாங்கி களாகவும், சோகத்தின் வேர்களாகவுமே வாழ்வதைக் காண்கின்றோம். போரின் உக்கிர பசிக்கு தம் வாழ்வை தொலைக்கும் பெண்களையும் முறை கேடான பாலியல் இச்சைக்கு பலியாகும் ஆட்டுக் குட்டிகளான சிறுமிகளையும் சந்திக்கும் எமது கலாசாரக் குழுச் சகோதரிகள் அவர்கள் துயர்களை பல பயிற்சிப் பட்டறைகள் வாயிலாக பாடல்களாக ஆக்கியுள்ளனர்.

இப்பாடல்களுடன் இந்தியப் பெண்கள் அமைப்புக்களாலும், மகாகவி பாரதியாலும் இயற்றப் பட்ட பாடல்களையும் உள்ளடக்கியதே பெண்களின் குரல் ஒலிநாடா ஆகும்.

**"உயிர்வெளி" கவிதைத்தொகுப்பு பெண்களால் எழுதப்பட்ட கவிதைகளாகும். காதல், வெட்கப் படவோ பெண்களால் வெளிப்படுத்தக்கூடாத விட யமோ அல்ல. காதல் அழகியல் உணர்வானது அது, அழகானது, அவசரமற்றது, அமைதி தருவது, துயர் தீர்ப்பது அது பொதுவானது.**

*தேடல்கள், புரிதல்கள்*
*வெறுத்தல்கள், மறுத்தல்கள்*
*கோரல்கள், போரிடல்கள்*
*எனப்பல வேலைகள் உள்ளன*
*எல்லாம் முடிவில்*
*நான் உன்னிடம்*
*வருவேன்.*

*அதுவரை*
*உன்காதலைக்*
*காத்து வைத்திரு*
*கலங்காதே*
*கன்னா பின்னா*
*என*
*கோபமும்*
*கொள்ளாதே...*

எனும் சுல்பிகாவின் கவிதை வரிகள் காலத்தின் தேவையாக அனைவர் மனங்களையும் தொட்டுப் படர்வதை உயிர் வெளி கவிதை நூலில் காணக் கூடியதாய் உள்ளது. இவ் வெளியீடுகளைப் பெற விரும்புவோர் எம் நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.








www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூக விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை



சமூக விழிப்புணர்வுப் பயிற்சிப் "பட்டறை" கடந்த மாசிமாதம் 24, 25ம் திகதிகளில் மட்டக்களப்பு "ஹம்சா" கோட்டல் கருத்தரங்கு மண்டபத்தில் சட்டத்தரணி ஆ. மங்களேஸ்வரியின் ஒருங்கிணைப்பில் நடாத்தப்பட்டது.

சமூகத்தில் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்கள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைக்கும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கருத்தரங்கில் பாடசாலை மற்றும் பல் கலைக் கழக மாணவர்கள், பொலிசார், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், குடும்ப ஆலோசகர், பத்திரிகையாளர்கள், சமூக சேவையாளர்கள், மற்றும் எமது அலுவலக உத்தியோகத்தர்கள், கலாசார செயற்பாட்டுக் குழுவினர் உட்பட ஐம்பதிற்கும் (50) மேற்பட்ட பங்கு பற்றுனர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில் 24ம் திகதி நிகழ்வுகளாக சட்டத்தரணி ஜே. ஜெயச்சித்திராவினால் "மனித உரிமைகள் பற்றிய' அறிமுகம்" என்ற தலைப்பிலான உரையும், சட்டத்தரணி எம். ரெமடியஸ்சினால் "குடும்ப சட்டம்" பற்றியும் "கைதும் தடுப்பு காவலும்" என்ற தலைப்பிலான உரைகளும் சட்ட பீட விரிவுரையாளர் கே. அருள் அவர்களால் "அடிப்படை உரிமைகள்" பற்றிய உரையும் நடைபெற்றது.

25ம் திகதி நிகழ்வுகளாக "கற்றவியல் சட்டத்தின் மூலங்கள் பற்றி விரிவுரையாளர் கே. அருள் அவர்களாலும், "பாலியல் வல்லுறவும் பாலியல் தொந்தரவுகளும்" பற்றி சட்டத்தரணி சு. சுகந்தியினாலும், "சிறுவர் உரிமைகள்" பற்றிய உரையானது சட்டத்தரணி எம் ரெம்டியஸ்சினாலும் நிகழ்த்தப்பட்டது.

ஒவ்வொரு வழங்குனர்களினதும் உரையினைத் தொடர்ந்தும் குறிப்பிட்ட விடயங்கள்தொடர்பாக பங்குபற்றுனர்களுடன் கலந்துரையாடலும் நிகழ்த்தப்பட்டது.

# பெண்கள் நலன்

### சுகாதாரக் கையேடு நூல் அறிமுகம்




பெண்கள் பலவாறான சமூக கட்டுப்பாட்டிற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விரும்பியோ விரும்பாமலோ கட்டுப்பாடுகளை பெண்கள் தளர்த்தவோ, மீறவோ முடியாமல் எமது மூதாதையர் பல வித வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். இக்கட்டுப்பாடு களில் அனேகமானவை பெண்களின் உடல் சார்ந்தே அமைந்து விடுகிறது. பெண்களின் உடலானது மறைக்கப்பட்டு ரகசிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டியதொன்று என்றும் பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற் குணங்களுக்குள் வாழ வேண்டியவள் என்றும் பல கருத்துக்கள் மக்கள் மனங்களில் பதிக்கப்பட்டு விட்டது. இதனால் இவர்கள் உடல் உளரீயாக பலவித சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது குறிப்பிட்டகாலங்களில் ஏற்படும் உடல் மாற்றங்களின் போது சந்தேகத்திற்கு உள்ளாகும் பெண்கள் பல வித மனக்குழப்பங்களிற்கு உள்ளாகின்றார்கள்.

அத்துடன் தமது உடல் மற்றும் பாலியல் உறுப்புகளில் ஏற்படும் நோய்க்களையும் அவை பற்றிய சந்தேகங்களையும் வெளிச் சொல்லாமல் மறைக்கிறார்கள். இவ்வாறு மறைப்பதனால் அதிகம் பேர் உயிர் இழப்பை எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

இப்பரிதாப நிலை இன்று வரை கிராம புறங்களில் நிகழ்ந்து கொண்டே உள்ளது. இவற்றை தவிர்க்குமுகமாகவே நாம் இச் சுகாதரக் கையேட்டினை மூன்று பாகங்களாக வெளியீடு செய்துள்ளோம் இம் மூன்று பாகங்களையும் வாசிப்பதன் மூலம் பூரண பலனை அடையலாம் என நம்புகின்றோம். மக்கள் நலன் கருதி 30/= விலையில் விற்பனை செய்கின்றோம். இக் கையேட்டினை எமது நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் ஆணாதிக்கம்



"அம்மா........ அம்மா" என அந்த குடிசைக்குள் இருந்து இரவு முழுவதும் முனகும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது. கணவன் எனப்படும் அவன் குடிசைக்கு வெளியே உலாவிக் கொண்டே இருக்கிறான். உதடுகள் ஒதுக்கப்பட்ட வார்த்தைகளை முனுமுனுத்துக்கொண்டே இருக்கிறது இருப்பதும் எழும்புவதும் குடிசைக் குள் எட்டிப் பார்ப்பதும் பல்லைக் கடிப்பதும் பொது வேலி எனப்படும் புற்களும் பூமரங்களும் கிளிசறியா மரங்களும் அடர்ந்த பகுதியில் நின்று மாமியார் வீட்டைப்பார்ப தும் கத்துவதுமாக......... மீண்டும் மீண்டும் குடிசைக்குள் முனகும் தன் மனைவியை முறைத்துக் கொண்டே இருக்கிறான். குழந்தைகள் அவளை சுற்றி தலைகீழாய் தங்களை மறந்து நித்திரையில் கிடக்கின்றன. எண்ணை வற்றிய குப்பி விளக்கின் மங்கிய ஒளியில் இவளது முகத்தில் அப்பிக் கிடக்கும் வேதனை விளக்கிற்கு மட்டுமே புரிகிறது. அவளால் நித்திரை கொள்ள முடியா விட்டாலும் உடல்வேதனை அவளை அரை குறை மயக்க நிலையில் விட்டிருக் கிறது.

மீண்டும் மீண்டும் பெருமுச்சு வந்து கொண்டே இருக்கிறது கண் முன்னே அக்காவிற்கு விழுந்த அடிகளும் உதைகளும் எப்படி...... எப்படி...... அக்காவால் தாங்க முடிந்தது....... தலை முடியை பிடித்து கல்லில் மோதிய போதும். கன்னங்களில் பளார்.. பளார்.. என அறைந்து இரத்தம் வாயாலும் மூக்காலும் கொட்டும் போதும்.... எப்படி எப்படி... என் அக்காவால் தாங்க முடிந்தது அவளது தங்கை எனப்படும் இவளது கண்கள் கண்ணீரை சொரிந்து கொண்டே இருக்கிறது. சூடான கண்ணீர் கன்னங்களை சுட்டுக் கொண்டே இருக்க இவளால் தூங்க முடியவில்லை...... வீட்டு வேலியோரம் எனப்படும், புற்களும் பூமரங்களும் கிளிசேறியா மரங்களும் அடர்ந்த பகுதியில் அத்தான் கோபமாக கத்தும் ஒலி ஆத்திரத்தையும் பயத்தையும் அடிக்கடி கிளப்ப "இவனெல்லாம் ஒரு மனுசனா" என மனம் அடிக் கடி கேட்கிறது.

முதுகுத்தண்டு "விண் விண்" என வலிக்கிறது. எவ்வளவு நேரமாக அவளது அம்மா சுவரில் சாய்ந்து கொண்டிருக்கிறாள். எல்லாப்பக்கங்களில் இருந்தும் பருந்துகளும் ஆந்தைகளும் 'கொத்திப் பிடுங்குவது போல ஓர் உணர்வு உறுத்திக் கொண்டே இருக்கிறது தனது நோயாளியான கணவனால் குடும்ப பாரத்தை சுமக்க முடியாத போது, குடும்பத்தை ஓட்டுவதற்காக வெளிநாட்டுக்குச் சென்று கஷ்டப்பட்டு உழைத்து பலன் ஏதும் இல்லாமல் போனபோது இல்லாத கவலையும் துன்பமும், இன்று அனுபவித்து கொண்டிருக்கிறாள். தன்னை தப்பிவித்து கொள்வதற்காக ஓடிவந்த தன் மூத்த குஞ்சை காகம் மீண்டும் மீண்டும் கவ்விக் கொத்திக் குதறிய காட்சி கண் முன்னே நிற்கிறது. தனது மூன்று பெண் பிள்ளைகளை படிக்க வைத்து நல்ல இடத்தில் கட்டி கொடுத்து எப்படி எப்படி எல்லாமோ வாழ வைக்க வேண்டுமென்ற கற்பனைகள் எல்லாம் மூத்த பெண் ஓடி போயித் தாள் என்று வந்த செய்தியை



கேட்டு சிதறுண்டு போயிற்று அவளுக்கு. சிதறுண்ட கற்பனை களை நினைத்து சோர்ந்து போகாமல், இருக்கும் இரண்டு பிள்ளை களுக்காகவும் கஷ்டப்பட்டு ஓலை களை ஓடுகளாக மாற்றி தகரங்களை செங்கற்களாக மாற்றி, வீடு என்ற ஒன்றை அமைத்து நாடு வந்து சேர்ந்தபோது தன் மூத்த பெண்ணின் துயர் கண்டு தடுமாறித்தான் போனாள், சிறு குடில் ஒன்றில் தன் முத்தமகள் வாழ்ந்து கொண்டிருந் தாலும் தினம் தினம் சீதனம் கேட்டு தன் மருமகன் அவளை அடிப்பதும் திரத்துவதுமாகவே இருந்தான். கொண்டு வந்த நகைகளில் சிலவற்றையும் பணத்தையும் கொடுத்தும் மருமகனின் கையும் வாயும் ஓய வேயில்லை.

வானத்தில் விடிவெள்ளி முளைத்திருந்தது உறங்கிய உணர்வுகளும் விழிகளும் விழித்தெழுவதற்காக முயற்சித்துக் கொண்டிருந்தது. ஆழ்ந்த மயக்க நிலையில் இருந்த அவளை அவளது மூத்த மகனது கண்கள் சந்தேகத்துடன் பார்த்தது. எழுந்து தன் தாயை தட்டி எழுப்பினான் ஊ..... கூம்.... எந்த அசைவும் இல்லை. மனம் முழுக்க பயம் பரவத் தொடங்கியது குழந்தைக்கு. தந்தையை தேடி தலையை வெளியே நீட்டிப் பார்த்தான். காலை அகல விரித்து மணலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மல்லாந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் அவன். வெளியே வந்து தந்தையை நெருங்கிய பிள்ளையின் கால்கள் விலகி, தாயின் அம்மாவின் வீட்டை நோக்கி ஓடி சேதியை தெரிவித்தது.

அவளை ஆஸ்பத்திரில் சேர்த்து மூன்று மணித்தியாலத்தின் பின்பே அவனுக்கு அவள் ஆஸ்பத்திரியில் இருப்பது தெரிய வந்தது. தனக்கு தெரியாமல் தன் மனைவியை ஆஸ்பத்திரியில் அனுமதித்த மனைவியின் வீட்டாருடன் சண்டைக்குப் போனான். கேட்க வந்த நோயாளி மாமனாருக்கு அடித்தான். தடுக்க வந்த அவள் தங்கையை காலாலும் கையாலும் தாக்கினான்.

தனது மனைவியை தனக்கு தெரியாமல் வைத்திருக்கும் ஆஸ்பத்திரி ஊளியரின் மேல் அவனது கோபம் திசை திரும்பியது. அனைத்து ஊழியரும் தடுக்க எதையும் கேட்காது, வலுக்கட்டாயமாய் இயலாத அவளை சைக்கிளில் ஏற்றி தனது குடிலுக்கு மீண்டும் கொண்டு வந்து சேர்த்தான்.

மன ஆறுதலுக்கு அவளின் வீட்டார்கள் காவல் துறையினரிடம் முறையிட்டனர். பகல் வந்த சங்கத் தலைவியிடம் சொல்லும் போது குரல்கள் தளுதளுத்தன. வரும் வழியில் அவள் குடிசையின் நிழலில் அமர்ந்து எங்கோ பார்த்து வெறித்து கொண்டிருக்கிறாள். அவள் கணவனை காணவில்லை குழந்தைகள் அவளை சுற்றி, எங்களைக் கண்டதும் எழுந்து வரும் அவள் முகத்தில் மரணத்தின் மௌன ஓசை என் மனதை பிசைகிறது. நிச்சயம் அசோக்குமார், பாலு மகேந்திரா, மணிரெத்தினம் எவரது கமராக்களுக்கும் அவளது முகத்தில் தெரியும் கவலையின் கோடுகளை காட்டும் திறமை இருக்காது.

**நோயுள்ள இடத்திற்குத் தான் மருந்து தேவை வன்முறைக்குள்ளாகும் மக்களை குறிப்பாக பெண்களை நோக்கி தம் பார்வையை திருப்பிக் கொண்டு வரும் நாம் பல இடங்களில் பெண்கள் சங்கங்களை அமைத்துள்ளோம். அந்த வகையில் இன்றுவரை வன் முறைக் குட்பட்டுக் கொண்டு வரும் எமது பெண்களின் தனிமைத் துயரை அகற்றி மனச் சுமைகளைக் குறைக்கும் முகமாக அவர்களை ஓர் கூட்டமாக ஒன்று சேர வைத்துள் ளோம். இங்கு நாம் இனம் காண்பது குடும்ப வன்முறைக்குட்பட்ட ஒரு பெண்ணின் சோக நிகழ்வையே. இனி இவ்வாறான துயர்கள் தொடராமல் இருக்க வழியமைப்பதே எமது விருப்பும் வேலையுமாகும்.**

# மொட்டுக்கள் மலரட்டும்

கொள்ளி பிறக்குவதற்கு அம்மா போயித்தாள். நான் வீட்டுக் காவலுக்கு இருக்கணுமாம். இந்த அம்மா என்ன கூட்டித்து போக மாட்டாள். இவளோட நான் கோபம். இண்டைக்கு லீவு இல்லாட்டி பள்ளிக்கு போயிருக்கலாம் இப்ப தான் ஞாபகம் வருது. பள்ளிக் கணக்குகள் செய்யணும். நல்ல காலம் ரீச்சர் அடி தந்திருப்பா எனக்கு இப்ப பசிக்கிறாபோல இருக்கே; அம்மா வந்து தான் சாப்பாடு போட்டுத் தரணும். நான் போட்டா எல்லாவற்றையும் கீழ கொட்டிப் போடுவன். வேருக்குது அதுக்கும் அம்மா தான் வரனும் என்னக் குழிப்பாட்ட. ம்.........ஆரோ என்ன கூப்பிடுறாப் போல இருக்கே. ஆரது..... எட்டிப்பாப்பம்.... ஆ..... இது நம்மட பக்கத்து வீட்டு மாமா என்ன கேட்கிறார்? , என்னட்ட ஓ வாருகல் (விளக்குமாறு) எடுத்து வரட்டாமாம். நான் போனா வீட்ட ஆரு காவல். பரவாயில்லை ஓடிப் போய் கெதியா ஓடி வருவம்........ ஏனென்டா இவர் எனக்கு ரொபி வாங்கிதாறவர் தானே. சரி கெதியா போவம்.

எங்க மாமாவைக் காணல்ல...? கூப்பிட்டு பாப்போம்..... ஓ ......வீட்டுக்குள்ள கொண்டு தரட்டாமாம். என்ன இந்த மாமா வளவு கூட்டுறண்டு கட்டிலில படுத்திருக்கிறார். இத இவர்ர கையில கொடுக்கிறதா......? இல்......ஆ....... கூப்பிடுகிறார் மாமா கையில கொடுப்போம்...... என்ரகையை இழுத்து என்னபக்கத்தில வைக்கிறாரே. ஐயோ நேரம் போகுது வீடு திறந்திருக்கே..... என்ன இந்த மாமா இப்படி கொஞ்சுறார்....... இவருக்கு கடைக்கு போய் கொடுத்தாத்தானே கொஞ்சுறவர்...... ஆ... ஏன் என்ன இப்படி தள்ளுறார்? ஐயோ மூச்செடுக்க முடியல்லையே எல்லாம் இருட்டுதே உடம்பு வலிக்குது என்ன கொல்லப் போகிறாரோ........? இவர் என்ன செய்யிறார்? அம்மாட்ட போகணும்... ..என்ர அம்மா .....!

**நினைவு மயங்கிய நிலையில் ஐம்பது வயது நிரம்பிய ஆணால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்ட பத்து வயது சிறுமியின் சோகநிகழ்வு அது. இன்று இச்சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறாள். எமது நிறுவன சட்டத்தரணி இச்சிறுமிக்காக வழக்காடுகின்றார். இதைப் போல் எத் தனை சிறுமிகள் இவ்வாறான பயங்கர நிகழ்வுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் சட்டத்தின் முன் குற்றவாழியை தண்டிக்கலாம் ஆனால்.. .....**

~வளரும் குழந்தையின் மனவடுக்களை எவ்வாறு நீக்குவது ....?

~சுதந்திர பூமியின் அழகுகளை எப்படி இவர்களுக்கு சொல்லிக் கொடுப்பது .........?

~சோகமே நிரம்பிய இவர்கள் கண்கள் யாரை நம்பும் ........ ?

~எதிர்காலமே பயங்கரமாய் காணும் இவர்கள் பார்வையின் பயணங்கள் எங்கு முடியும் ..........?

~சமூதாயமே பதில் சொல்லட்டும்

www.tamilarangam.net

# சிறுவர்களை இம்சித்தல் தொடர்பான கைந்நூல் அறிமுகம்




பாதகம் செய்வோரைக்
கண்டால் - நீ
பயம் கொள்ளல் ஆகாது
பாப்பா
மோதி மிதித்து விடு
பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு
பாப்பா


*பாரதி*



சிறுவர்களுக்கெதிரான பால்ய, பாலிய இம்சைகள். இன்று நாட்டில் அதிகரித்து கொண்டு வருகிறது. இவ்வாறு அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுப்பதும் அவர்களுக்கு உடல், உள பாதுகாப்பு அளிப்பதும் சமூகத்தில் கடமையாற்றும் அனைத்து துறையினரதும் கடமையாகும். இந்த வகையில் எமது நிறுவனத்தால் சிறுவர்களை இம்சித்தல் தொடர்பான கைந்நூல் ஒன்று வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இக் கைநூல் இலங்கை பொலீஸ் திணைக்களம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ரெட்பார்னா ரெட்டா பார்னா ஆகியவற்றின் உதவியுடன் வெளியிடப்பட்டது.







சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.
தொ. பேசி - 23297

முகவரி :
SAMARA
87 RUEDE COLOMBES
92600 ASNIERES SURSEINE
FRANCE

ISSN. 1391-6130



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்